1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். தமிழ்நாடு அரசு இந்திய தணிக்கைத்துறைத் தலைவருடன் கலந்தாலோசித்து திரு. ஜி. துவாரகநாதன், ஐ.ஏ. & ஏ.எஸ். அவர்களை அயல் துறைப் பணி வரையறைகளின் கீழ் 28—6—1971 முதல் இரண்டு ஆண்டுக் கால அளவுக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முழுநேர நிதி இயக்குநராக நியமித்துள்ளது. இவர் மேற்படி கழகத்திடமிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,800-லிருந்து 2,000 வரை என்ற வீதத்தில் சம்பளமும் விதிகளின்கீழ் அனுமதிக்கத்தக்க அகவிலைப்படியும் பிற படிகளும் பெற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Titanium factory in Tamil Nadu

*83 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start a Titanium Factory in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இந்திய அரசுக்குச் சொந்தமான 'தி இண்டியன் ரேர் எர்தஸ் லிமிடெட்' என்னும் நிறுவனம் 90 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் டிடானியம் டை ஆக்ஸைட் கொண்ட சுத்திகரித்த இல்மினைட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது பற்றி யோசித்து வருகிறது. அந்த ஆலை தமிழ் நாட்டிலோ, கேரளாவிலோ, ஒரிஸ்ஸாவிலோ நிறுவப்படுவது சாத்தியம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is an important question and a supplementary question may be allowed.

Scooter factory in Public sector

*84 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a scooter factory in public sector; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கேள்விகளும் மிக முக்கியமான கேள்விகள்தான். 50 கேள்விகள் கேட்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு கேள்விக்கும் துணைக் கேள்விகள் வேண்டும் என்றால் 20 கேள்விகள் மட்டும் பேரவையில் கேட்கச் சொல்லிவிட்டு, மற்றவைகளைப் பிரிண்ட் செய்துதான் வைக்க வேண்டியிருக்கும் என்று பலமுறை சொல்லியாகிவிட்டது. ஒன்று, கேள்விகள் கேட்கத்தான் வேண்டுமென்றால் கேளுங்கள், அதற்கும் சம்மதம்தான். அல்லது, எவ்வளவு கேள்விகள் கேட்பது என்று வைத்துக்கொள்ளலாம். 20 கேள்விகளைக் கேட்டுவிட்டு 30 கேள்விகளை பிரிண்ட் பண்ணிவைத்துவிடலாம்.

[1972 சனவரி 28

THIRU J. JAMES: Sir, Question-Hour is very important. At least one supplementary question may be allowed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வி வருகிறது என்றாலே அது இம்பார்ட்டண்ட்தானே.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு கேள்விக்கு 20 சப்ளிமெண்ட்ரி கேள்விகள் வரையில் கொடுக்கிறீர்கள். ஒரு கேள்விக்கு என்றால் ஒன்றுமேயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பேரவைத் தலைவரின் 'டிஸ்கிரிஷ'னைப் பொறுத்து முக்கியமான கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படுகின்றன. It is a reflection on the Chair. 50 கேள்விகள் வினாப்பட்டியலில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர்கள் ஒப்புதலுடன் இலாக்காவினர் அதிகமாக விடைகள் அனுப்புகிறார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் துணைக்கேள்விகள் கேட்டு பதில் சொல்வது என்றால் அதற்கான நேரம் இல்லை. பார்லிமெண்டில் செய்வது போல் 5, 6 கேள்விகள் கேட்டுவிட்டு மீதியை பிரிண்ட் பண்ணி வைத்துவிட்டால் அதை 'பப்ளிஷ்' செய்யலாம். அரிசன நலத்துறை பற்றிய கேள்வி முக்கியமான கேள்வி. எனவே, அதற்கு அதிகமான துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டன. அதேபோல் கோயில் நிலங்கள் ஏராளம் இருக்கின்றன. அதில் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்குக் கவலை இருக்கிறது. ஆனால் இந்தத் தொழிற்சாலைப் பற்றிப் பரிசிலனையில் இருக்கிறது. ஒரிஸ்ஸாவிலோ அல்லது தமிழ்நாட்டிலோ அது அமையும் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பரிசிலனைக்காவது கொஞ்ச நேரம் விடலாம். ஆகவே, தலைவரின் டிஸ்கிரிஷனின்படி சில கேள்விகளுக்குத் துணைக் கேள்விகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறதே தவிர, இந்தக் கேள்விக்கு என்று பாரபட்சம் காட்டுவது இல்லை. சில பிரச்னைகள் இருக்கின்றன. அரிசன மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவது பற்றிய கேள்விக்குத் துணைக்கேள்விகள் கேட்டுத்தான் ஆக வேண்டும். அதுபோல் கோயில் நிலங்கள் பற்றிய கேள்விக்குப் துணைக் கேள்விகள் பற்றித் தலைவர்கள் கூடி முடிவு செய்யலாம். அப்படிச் செய்தால் எனக்கும் கொஞ்சம் சுலபமாக இருக்கும்.

How I am to finish the rest of the questions before 10 o'clock?

THIRU R. PONNAPPA NADAR: Sir, the present practice may continue.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களும் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும் டிடானியம் தொழிற்சாலை ஒரிஸ்ஸாவிலா அல்லது தமிழ்நாட்டிலா என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அது கொஞ்ச நாட்கள் நடக்கட்டுமே. அதற்குக்கூட . . .

திரு ஜே. ஜேம்ஸ்: நம் நாட்டைவிட்டு வெளியே போகக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவேதான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வி.